ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

**सत्सङ्गत्वे निस्सङ्गत्वं निस्सङ्गत्वे निर्मोहत्वम् ।**
**निर्मोहत्वे निश्चलतत्त्वं निश्चलतत्त्वे जीवन्मुक्तिः ॥**

**सत्सङ्गत्वे** - மஹான்களுடைய பழக்கம் நேரும்பொழுது

**निस्सङ्गत्वं** - கெட்ட பழக்கம் நேராது

**निस्सङ्गत्वे** - பிறருடன் சேர்க்கை விலகினால்

**निर्मोहत्वं** - சித்தத்திற்கு மோகமேற்படாது

**निर्मोहत्वे** - மனத்திற்கு உலகிலுள்ள வஸ்துக்களில் விருப்பமில்லாவிட்டால்

**निश्चलतत्त्वं** - எப்பொழுதும் பிரகாசிக்கின்ற ஆத்மஞானமேற்படுகின்றது.

**निश्चलतत्त्वे** - ஆத்மஸ்வரூபத்தின் பிரகாசம் ஸ்திரமாய் ஏற்பட்டால்

**जीवन्मुक्तिः** - ஜீவன்முக்தி என்கிற சிறந்த பதம் கிடைக்கின்றது.

அதிக துக்கத்திற்குக் காரணமான ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விடுபட்டு உத்தமமான சிரேயஸ்ஸைப் பெறவேண்டுமானால், ஸாதுஸங்கம் அதாவது—பெரியோர்களின் சேர்க்கை வேண்டுமென்றும், அதனால் நமக்கு எப்படி நன்மையுண்டாகுமென்பதையும் இதினால் அறிவிக்கிறார்.

ஒருவனுக்கு முற்பிறவியில் செய்த புண்ய கர்மங்களால் ஸாதுக்களின் சேர்க்கை ஏற்பட்டால்; அவர்களின் உபதேசத்தால், அவனிடமிருக்கும் கெட்ட நடத்தைகளும், கெட்டவர்களுடைய பழக்கங்களும் விலகிவிடுகின்றன. அவை விலகவே உத்தம பதத்தைப் பெறுவதற்கு இடையூறாகச் சித்தத்தில் குடிகொண்டிருந்த மோகமென்கிற அஞ்ஞானம் தானாகப் போய்விடுகின்றது. ஸகல துக்கத்திற்கும் காரணமான அஞ்ஞானம் மனத்தைவிட்டு விலகியவுடன் சுத்தமாயும், சலனமற்றதாயுமுள்ள மனத்தில் பரம்பொருளின் பிரகாசம் ஸ்திரமாய் ஏற்படுகின்றது. தன்ஜீவதசையிலேயே இவ்விதபாக்கியம் ஒருவருக்கு நேருமாயின் அதைத்தான் ஜீவன் முக்தி என்று சான்றோர்கள் சாற்றுகின்றார்கள். அதாவது அவன் அந்த ஜன்மாவிலேயே முக்தனாக ஆய்விட்டான் என்று கருத்து. ஆகையால் ஸாதுஸங்கத்தைப்பெற முயலவேண்டியது அவசியம். சுபம்.

உபபத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.

க்ஷய-ஹூ ஆவணி-மீ ௨௪உ

# விதவா விவாஹமும் காந்தியும்.

ஆடி-மீ 28-உ க்குச்சரியான (12-8-26) தேதி பிரசுரித்த மித்திரனில் நிர்பந்தவைதவ்யம், மகாத்மாவின் வருத்தம் என்று தலையங்கமிட்டு வெளிவந்த வியாஸத்தைக் கண்ணுற்றோம்.

அதில் காந்தி கருதுவதாக வரைந்துள்ள விஷயங்களின் ஸாராம்சத்தை அடியில் வருமாறு காண்க.

1. விதவைகளைப்பற்றி ஸர். கங்காராம் பிரசுரத்தில்காணப் படுகின்ற கணக்கைப் பார்த்தால், 1921-வருஷத்தில் ஜனக்கணக்கின்படி ஹிந்து விதவைகளின் சங்கியை 329076 என்று தெரிகின்றது.

ஹிந்து மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு பசுக்களைப் பாதுகாக்கவேண்டுமென்று நாம் கதருகிறோம். ஆனால், பால்ய விதவைகளாகிய மனிதப்பசுக்களை நாம் ரக்ஷிக்க மறுக்கிறோம். மதத்தைக் காப்பாற்றுவதற்காக நாம் சண்டை போடுகிறோம். அதே மதத்தின் பெயரால் 3 லக்ஷத்திற்கதிகமான பால்ய விதவைகள் ஆயுள் முழுவதும் விதவைகளாக இருக்கும்படி நாம் நிர்ப்பந்திக்கிறோம். இது பலாத்காரமேயொழிய வேறில்லை என்று கூறப்பட்டிருக்கின்றது.

1, இவ்விதம் இவர் அபிப்ராயப்படுவது உசிதமில்லை. ஸர். கங்காராம் பிரசுரித்தபடியே இந்து விதவைகளின் சங்கியை 32976-ம் உண்மையாய் இருக்கட்டும். விதவைகளின் சங்கியை இவ்வளவு ஏற்பட்டதற்கு யாது காரணம்? அவரவர்களின் மாதா பிதாக்களாலாவது மற்றுமுள்ள பந்து ஜனங்களாலாவது தங்கள் குழந்தைகளுக்கு வைதவ்யம் அவசியம் வேண்டுமென்று ஆதாவுடன் அழைக்கப்பட்டதினால் ஏற்பட்டதா? அல்லது வேறுகாரணத்

தாலா? ஸ்திரீகளுக்கு வைதவ்யத்தைக் காட்டிலும் பெரிதான கஷ்டம் வேறு இல்லை. இக்கொடிய கஷ்டம் தங்கள் குழந்தைகளுக்கு வேண்டுமென்று ஒருவரும் எதிர்பார்க்கமாட்டார்கள் என்று எவரும் நிச்சயமாய்க் கூறுவர். எதிர்பார்க்கப்படாத பெருங்கஷ்டம் அவர்களுக்கு நேர்வதற்கு யாது காரணமென்றால் அவரவர்களும் முற்பிறவியிற்செய்த குரூரமான தீபச்செயலைத்தவிர்த்து மற்றொன்றும் கூறவியலாது. இவ்விதம் தீர்மானிக்க எப்படி முடியுமென்றால் சாஸ்திரங்களால் தான் தீர்மானம் செய்கிறோம். ஆஸ்திகர்களான இந்துக்களுக்கு அவைகளைவிட்டால் வேறு கதியில்லை. சாஸ்திரப்பிரமாணங்களை அங்கீகரிக்காதவர்களை நாஸ்திகர்களென்றே தைர்யமாய்க் கூறுகிறார்கள். ஸகல ஜனங்களும் முன் செய்த கர்மவினைபால் பலமாதிரியான துக்கங்களை அனுபவிப்பது போல் சிலர் வைதவ்யமென்கிற இந்த துக்கத்தை அனுபவிக்கிறார்கள். இது பகவானால் ஏற்படுத்தப்படுகிறதென்பதும் நம் போன்றவர்களால் இதைத் தடுக்க முடியாதென்பதும் திண்ணம். இவ்விதம் கஷ்டம் நேர்ந்த பிறகு மறுமணம் ஸ்திரீகளுக்கு கூடாதென்று வற்புறுத்தும் ஸ்ரீ பரமேசுவரரின் கட்டளையான சுருதிகளின் கருத்தைக்கொண்டு அதைச் செய்யாமல் மற்றும் அவர்களுக்குச் செய்யவேண்டிய பாதுகாப்பை அவரவர்களும் தம் சக்திக்கியன்ற வரையில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் பிரசித்தமே. இவ்விதமிருக்க "பசுக்களைப்பாதுகாக்கவேண்டுமென்று நாம் கருதுகிறோம். ஆனால் பால்ய விதவைகளாகிற மனிதப் பசுக்களைப் நாம் ரக்ஷிக்க மறுக்கிறோம்". என்று காந்தி எழுதியதின் கருத்து நன்கு புலப்படவில்லை. ரக்ஷிப்பது என்கிற பதத்திற்கு சாஸ்திர விரோதமான மறுவிவாகம் செய்கிறது தான் பொருள் என்று அவர் கருதுகிறாரா? அவ்விதமிருந்தால் சாஸ்திரங்களில் கூறிய விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டு முடிந்த வரையில் கர்மாக்களையனுஷ்டித்து வரும் இந்துக்களை விலங்கினங்களைப்போல் விதிவிலக்குகளுக்குக் கட்டுப்படாமல் தோன்றியபடி பாபபுண்யமென்கிற ஞாபகத்தைவிட்டு அவரவரும் தம் இஷ்டப்படி இருக்கவேண்டுமென்று உபதேசிப்பதாக ஆகிறது. இது போன்ற இன்னும் பலவுபதேசங்களைச் செய்ய கங்கணம் பூண்டு கலிமஹாராஜன் முன் வந்திருக்கும்பொழுது இவரும் அவனுக்கு அமைச்சனாயிருப்பது அறிஞர்களுக்கழகல்ல.

2. மதத்தைக் காப்பாற்றுவதற்காக நாம் சண்டை போடுகிறோம். ஆனால் அதே மதத்தின் பெயரால் 3 லக்ஷத்திற்கதிகமான பால்ய விதவைகள் ஆயுள் பூராவும் விதவைகளாகயிருக்கும்படி நிர்பந்தப்படுத்துகிறோம். இது பலாத்காரமேயொழிய வேறில்லை என்றும் சொல்லி இருக்கிறார்.

இதுவும் சரியல்ல. மதத்தைக் காப்பாற்றுவதற்கும் இதற்கும் என்ன ஸம்பந்தம்? ஒரு ஸமயம் விதவைகளுக்கு விவாகம் ஏற்பட்டால் பல ஸந்ததிகள் உண்டாகும். அவைகளால் மதத்திற்குபாதுகாப்பு ஏற்படும்என்று நினைப்பதும் சரியல்ல. மதத்தில் விசேஷமான பற்றுதலையடைந்து மிகவும் அறிவாளிகளாயிருந்த கோடிக்கணக்கான மஹான்களின் காலம் சென்று விட்டது. அதனால் நம்மதத்திற்கு ஏற்பட்ட குறைவு என்ன? எந்தக் காலத்திலும் சில துர்புத்திகள் இருப்பது வழக்கந்தான். அது போல் தற்காலமும் சிலரிருக்கிறார்கள். காலத்தின் தோஷத்தால் இப்பொழுது மதவிரோதிகள் கொஞ்சம் அதிகமாகவே இருக்கட்டும். அதனால் மதத்தை என்ன செய்ய முடியும்? அது எங்காகிலும் யாரையாவது பிடித்துக்கொண்டு ஜீவித்திருக்குமேயல்லாமல், ஒரு காலும் போகாது. அதைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஸ்ரீபகவானைச் சேர்ந்தது. இந்த அபிப்பிராயத்தைக் கீதையிலும் பகவானே ஸ்பஷ்டமாக "यदा यदा" என்கிற வசனத்தால் கூறியிருக்கின்றார். இவ்விதமின்றி அசாஸ்திரீயமாய் யாதொரு விதியுமில்லாமல் போகார்த்தமாக கிரகிக்கப்பட்ட விதவைகளிடமிருந்து ஜனித்த "கோளன்" என்று நிந்திக்கப்பட்ட ஸந்ததிகளால் நம் மதம் ரக்ஷிக்கப்படுமென்று எதிர்பார்ப்பது எங்ஙனம் பொருந்தும்? மதரக்ஷணத்திற்கும் விதவாவிவாகத்திற்கும் யாதொரு சம்பந்தமும்இல்லை என்பது நிச்சயம். மேலும் மதத்தை ரக்ஷிப்பதற்காகவே விதவாவிவாகம் கூடாதென்கிறோம். அஃதெங்ஙனமெனில் மதமென்றால் கொள்கை. இந்துக்கள் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் விசேஷமான சுகத்தைப் பெறவேண்டி, சாஸ்திரங்களாலும் அவைகளைப் பின்பற்றும் மஹான்களாலும் அறிவிக்கப்பட்டவழியையனுஸரித்துநடப்பதே மதமாகும். அவ்விதமின்றி உலக வாழ்க்கையில் விதிக்கு முறணாக நமக்குத் தோன்றியவாறெல்லாம் நடத்தவேண்டுமென்று தீயச்செயலான தீண்டாமை ஒழிப்பது, விதவாவிவாகம் செய்

வதுமுதலான காரியங்களைச் செய்யவேண்டுமென்று தைர்யமாய் பறையறைய முன்வந்தவர்கள் மதப்பற்றுள்ளவர்களாக எப்படி யாவார்கள்? ஆகையால் உண்மையில் மதப்பற்றுள்ளவர்களாயிருப்பவர்கள் தம்மாலியன்ற வரையில் சாஸ்திர விரோதமான கெட்ட கர்மாக்களைத் தாம் செய்யவோ பிறரைச் செய்யும்படி அனுமதிக்கவோ ஒரு ஸமயமும் முன்னுக்குவரமாட்டார்கள். ஆகையால் விதவாவிவாகத்தை மறுப்பதால் மதப்பாதுகாப்பிற்கு ஸாதகமேயன்றி அற்பங்கூட பாதகமில்லை. (தொடரும்)

உபபத்திராதிபர்.

---

## சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி கல்விச்சாலையில் நடைபெற்ற உபன்யாஸத்தின் சுருக்கம்.

சென்ற ஜூலைமீ ௩௦உ வெள்ளிக்கிழமையன்று சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி கீழ்நாட்டுக் கல்வியாசிரியப் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற பண்டித ஸமாஜத்தில் தலைமை வகித்த மாஜி ஸப் மாஜிஸ்டிரேட்டு மகா-ா-ா-ஸ்ரீ ராமாசாஸ்திரிகள் செய்த உபன்யாசத்தின் சுருக்கம் பின் வருமாறு:—

பண்டிதர்களே!

என்னை இங்கு தெரிந்தமட்டில் ஏதாவது சொல்லவேண்டுமென்று பிரின்ஸிபால் மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திசாஸ்திரிகள் சொல்லியுள்ளார். ஆனால் கல்வியை நன்கு பயின்று கல்வித் துறையிலேயே உழைப்பவர்கள் கல்வியைப்பற்றிச் சொல்வது தகும். என்போன்ற ராஜீய உத்தியோகத்தில் உள்ளவர்கள் மிக்க பாண்டித்தியம் வாய்ந்த உங்கள் முன்னிலையில் பேசுவது தகாது. ஆயினும் என் சொல்லில் குணத்தை மாத்திரம் கிரகிக்குமாறு வேண்டுகிறேன். பிரியமிருப்பின் தோஷம் படாது என ஆங்கிலத்திலொரு மொழியுளது, 'Offences are pardoned when there is love at bottom'

புத்தி சக்தியென்பது மனிதனுக்கு இயற்கையிலேயே அமைந்துள்ளது. கல்வியானது அதைப் பிரகாசிக்கச்செய்வதே யல்லாமல் புதிதாய் உண்டாக்குவதில்லை. கண்ணிருப்பவர்களுக்கு உதவியளிப்பதேயல்லாமல் கண்ணில்லாதோருக்குக் கண்ணாடி பார்வையை உண்டு பண்ணுவதில்லை.

यस्य नास्ति स्वयं प्रज्ञा शास्त्रं तस्य करोति किम् ।
लोचनाभ्यां विहीनस्य दर्पणः किं करिष्यति ॥

நெருப்பினால் எவ்வாறு தங்கத்தின் கசடுகள் நீங்கி பிரகாசிக்கிறதோ அவ்வாறு கல்வியறிவால் அஜ்ஞானம் நீங்கி அறிவு ஒளி வீசுகிறது.

यथाग्निना हेममलं जहाति ध्मातं तदास्वं भजते च रूपम् ।

கல்வியறிவை நாமாகப் புத்தகங்களைப் படித்து விருத்தி செய்துகொள்வது இயலாது. ஒரு ஆசானின் கீழ் படித்தாலன்றி நல்லறிவு உண்டாகாது. அஜ்ஞானமாகிய இருள் ஆசான் சொல்லன்றி அகலாது,

उद्यन्तु शतमादित्याः उद्यन्तु शशिनां शतम् ।
न विना विदुषां वाक्यात् नश्यत्याभ्यन्तरं तमः ॥

எவ்வாறு ஸர்ப்பத்தின் படத்திலுள்ள இரத்தினம் மந்திரசக்தியுடைய ஒருவனால் நம் கையில் எடுத்துக் கொடுக்கப்பட்டால்தான் பிறகு நம் உபயோகத்திற்கு இசைந்ததாகுமோ அது போல ஆசானால் கொடுக்கப்பட்ட கல்வியே உபயோகத்திற்குத் தக்கது 'दृष्यं करगतं रत्नं न तथा फणिमूर्धनि' இக்கருத்தே வேதத்திலும் 'आचार्यवान् पुरुषोवेद' என்ற வாக்கியத்தினால் வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒரு முகமாய் கேட்டறியாத ஒருவனுடைய வித்தை ஒருபொழுதும் பிரகாசிக்காது. கற்றறிந்தபலர் முன்னிலையில் பரபுருஷனால்கருத்தரித்தஒருஸ்திரீயைப் போல தன் கருத்தை வெளியிடப் பயந்து வெட்கித் தலை குனிவான்.

भ्राजते न सभामध्ये जारगर्भ इव स्त्रियः ।

வித்தையை நாம் பயிலுவதற்கு மூன்று வழிகள் கூறப்பட்டுள்ளன. அவைகளாவன:— 1. ஆசானுக்குப் பணிவிடை புரிதலும், 2. தக்க பொருளுதவி செய்தலும், 3. ஒரு கல்வியைக் கற்பித்துப் பிறகல்வியைப் பெறுதலுமாம்

गुरुशुश्रूषया विद्या पुष्कलेन धनेन वा ।
अथ वा विद्यया विद्या चतुर्थं नोपलभ्यते ॥

இப்பொழுது நம் நாட்டில் கையாளப்பட்டு வரும் முறை பொருளைக் கொடுத்தல் என்ற ஒன்றேயாம்.

வித்தையின் முக்கியப்பயன் என்னவென விசாரிக்கப்புகுந்த மேல் நாட்டு சாஸ்திரி ஒருவர் (Baron) சொல்லுவதாவது கல்வியானது (Forability, delight and Judgement) புத்தி கௌசலத்தையும், மனஸ் ஸந்தோஷத்தையும் நியாயத்தையும் நன்கு தீர்மானிக்கும் திறனையும் அளிக்கிறது என்பதாம். நம்மனத்திற்குள்ளே மறைப் பொருளாயமைந்துள்ள அழுக்கைக் கழுவி நம்மை வித்தை சுத்தமாக்குகிறதென ஒரு ஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது 'विद्यया स्नातीत्येके' கவிதிலகனான பட்டபாணன் காதம்பரியில் இக்கருத்தையே கூறியுள்ளான்.

गुरूपदेशं नाम अखिलमलप्रक्षालनं अजलं स्नानम् ।

புத்தி சக்தியின் உயர்வு தாழ்வுகளைப் பொருத்தமே ஸ்தாவரம், மனுஷ்யன், இருஷி, சிவன் என்ற வேறுபாடுகள்

मनुष्या मुनयस्सुराः । शिव इत्यप्यमी भेदाः चिदुत्कर्षनिबन्धनाः ।

நமக்கு உபநயனமென்று ஒருஸம்ஸ்காரம் ஏற்பட்டுள்ளது அது வித்தை பயிலுவதற்காகவே.

उपनयनं विद्यार्थः श्रुतितस्संस्कारविशेषः ।

வித்தையின் சிறப்பை பர்திருஹரி என்பவர் நன்கு வெளியிட்டுள்ளார்.

विद्या नाम नरस्य रूपमधिकं प्रच्छन्नगुप्तं धनं
विद्या भोगकरी यशस्सुखकरी विद्या गुरूणां गुरुः ।

**केयूराणि न भूषयन्ति पुरुषं हारा न चन्द्रोज्ज्वलाः**
**........ वाण्येका समलङ्करोति पुरुषं**

இக்கருத்தைத்தெரிவிக்கக்கூடிய தென்மொழிச்செய்யுளுமுண்டு

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல——கல்வியழகே யழகு.

இப்பொழுது படிப்பதெல்லாம் வயிற்றை வளர்ப்பதற்கேயல்லாது வேறல்ல (Breadwinning Education) ஊன்றிப் படிப்பதில்லை படிப்பதை நன்கு மனதில் தாரணம் செய்துகொள்ள வேண்டும். அதனால்தான் மனிதனுக்கு மேன்மை உண்டாகிறது.

**कण्ठस्था या भवेद्विद्या तया विद्वान् प्रकाश्यते ।**

நாம் எவ்வளவு சிறந்த குலத்தில் பிறந்தவனாகயிருப்பினும் கல்வியறிவில்லாவிடில் பயன்பட மாட்டோம்.

**किं जन्मना च महता पितृपौरुषेण शक्त्या च याति निजया पुरुषः प्रतिष्ठाम् ।**

மாணாக்கனின் யோக்கியதையைச் சொல்லுங்கால் முக்கியமாய் பக்தியுடன் கவனிப்பவனே கற்பிக்கப் படத்தக்கவன், அங்ஙனமல்லாதவனுக்குக் கற்பிப்பது தகாது

**मास्म प्रमाद्यन्तमध्यापयेत् । सर्वार्था न सिध्यन्ति ।**

இக்கருத்தை ஆங்கில வித்வானொருவர் வெளியிட்டுள்ளார். I would rather be in company with the dead men than with the absentmindəd) (இ. ள். மனம் செலுத்தாதவர்களிடையே இருந்து பழகுவதிலும் உயிரற்றவர்களிடையே இருத்தல் மேலானதாம்). தமிழ்க் கிரந்தங்களில் சிஷ்யர்களை மூன்று வகுப்பினராகப் பிரித்து 1 அன்னத்திற்கும் கோவுக்கும் ஒப்பானவர்கள் உத்தமர் என்றும் 2 மண்ணுக்கும் கிளிக்கும் ஒப்பாவவர்கள் மத்திமர் என்றும் 3 ஆடு எருமை நெய்யரி இவைகளுக்கு ஒப்பானவர்கள் அதமர் என்றும் கூறினர்.

அன்னமாவே மண்ணொடு கிளியே இல்லிக்குடமாடெருமை
நெய்யரி, அன்னார்தலை இடைகடை மாணாக்கர்

அதன் கருத்துக்களாவன:— ஆசானிடம் கற்றதைப் பிறகு தனிமையில் நன்கு சிந்தித்து ஸாரத்தை அறிபவர் உத்தமர் எனவும், கற்ற நூலன்றி வேற்று நூற்பொருளைக் கூறமாட்டாதவன் மத்திமன் எனவும், நல்லபொருளை மறந்து தீயபொருளைச் சிந்தித்து பற்றிக்கொள்பவன் அதமனெனவும கொள்ளப்படுவனவாம். குருவின் அனுக்கிரகத்தினால் மாத்திரம் கல்விக்கடலைக் கடந்தவர்களும் உளரெனப்புராணங்களால் அறிகிறோம்.

**भागवते- गुरोरनुग्रहेणैव पुमान् पूर्णः प्रजायते ।**

ஆசான் புகட்டுமறிவில் நாலில் ஒரு பாகமே அவரிடமிருந்து நாம் அடைகிறோம் आचार्यात्पादमादत्ते ஆசானுரைத்த தமைவரக்கொளினும் காற் கூறல்லது பற்றலனாகும். பிறகு நம் முயற்ச்சியாலேயும் உடன் பயில்வோரின் உதவியாலும் அது பூர்த்தியடைகிறது.

நாம் கல்வி கற்பதன் பயன் பொருள் சம்பாதிப்பதே எனக்கொள்ளக்கூடாது. ஆனால் கல்வியை நன்கு பயின்றால் அதையும் அக்கல்வி தரவல்லதே वित्तकरी च विद्या தனம் என்ற சொற்கு நாம் கொள்ளும் 'பணம்' என்பதே பொருள் அல்ல. எவர்களுக்கு எது எது விரும்பத்தக்கதோ அதுவே அதன் பொருளாம். அவ்வாறு அறிஞர்களுக்கு வறுமையே தனம் எனப்படும்.

**न खलु धनत्वं जातिः यस्य यदिष्टं तदेव तस्य धनम् ।**
**तत्तादिव पामराणां आकिञ्चन्यं धनं विदुषाम् ॥**

எவன் பொருளை அடைய விரைந்து முயல்கிறானோ அவன் அறிவீனன் என ஒரு மேல் நாட்டு சாஸ்திரி உரைக்கின்றார். Bacon " He who hastens to obtaind riches is innocent " நாம் எப்பொழுதும் பணத்தையே நம் குறிக்கோளாகக் கொள்ளலாகாது. அது கடவுள் விதித்தவாறு நிச்சயம் கிடைக்கும். தம் முயற்சியால் அதிகமாகா

**कूपे पश्य पयोनिधावपि घटो गृह्णाति तुल्यं जलम्**

நாம் வித்தையையே சிறந்ததனமாகவும்மற்றதனமெல்லாம் வீண் என்றும் கொள்ள வேண்டும். किमु धनैर्विद्यानवद्या यदि நம் முடைய முன்னோர்கள் கல்வியிற் சிறந்தவர்களாகவும் பணத்தை

ஒரு பொருளாகக் கருதாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருந்தார்கள் என்பது நன்கு விளங்குகின்றது. வியாகரணசாஸ்திரதில் சிறந்த வாருசியின் குருவின் வறுமை நிலையை வர்ணிக்குங்கால் அவர் மனைவியை रूपिणीव दुर्गतिम् ஏழ்மையே ஒரு பெண்ணுருவு எடுத்து வந்ததுபோலிருந்தாளென கதாஸரித்ஸாகரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாறான நிலைமையிலும் நம் நாட்டினர் கல்வி பயிலுவதையே முக்கியமாகக்கொண்டு சிறப்புற்றோங்கி வளர்ந்தனர். வேதத்தில் காடகத்தில் பாத்வாஜ மஹரிஷி மூன்று ஜன்மங்களெடுத்து வித்யை பயின்றார். அது போதாதெனக் கருதி நன்காவது ஜன்மமளிக்குமாறு இந்திரனை வேண்டினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாந்தோக்கியத்தில் நாரதர் பல வித்தைகளைப் பயின்றுள்ளார் எனக் கூறப்படுகிறது. பாணன் சொல்லுமாறு-

निर्गतासु न वा तस्य कालिदासस्य सूक्तिषु ।
प्रीतिर्मधुरसान्द्रासु मञ्जरीष्विव जायते ॥

காளிதாசன் முதலியவர்களின் கல்விச் சிறப்புக்கள் யாரைத்தான் மயக்கவில்லை. சபாஸ்வாமி என்பவர் எல்லா வேதங்களையும் நன்குணர்ந்தவரென அறிகிறோம். ‘ सहस्रं शाखाः अर्थतो वेदशबलः ’ அறிஞர்கள் அதிகமாகப் பொருள் சேர்த்து வைத்துக்கொள்ளக் கூடாதென நிஷேதம்கூட நம் தர்மசாஸ்திரங்களால வெளியிடப்பட்டிருக்கிறது. ஒருவன் மூன்று நாள் உணவுப் பொருளுக்கு மேல் சேகரித்து வைத்தல் கூடாது அப்படி வைத்திருப்பவர்கள் ‘ कुण्डधान्यः ’, ‘ कुसूलधान्यः ’ எனப்பலவாறு தோஷமுடையவர்களாக எண்ணப்படுகிறார்கள்.

தற்காலம் சிலர் ஸ்திரீகளும் சூத்திரர்களும் கல்வி பயிலுவது கூடாதென்று கூறுவர், அது தவறு, நாம் வேதத்தில் நின்று மைத்ரேயி என்பவள் மிக்க கல்வியறிவு வாய்ந்தவளென்றும், ராமாயணத்தில் நின்று அருந்ததி மிக்கப் படித்தவளென்றும், உத்திரராம சரித்திர நாடகத்தில் நின்று ஆத்ரேயி என்பவள் படித்து வந்தாளென்றும் தெளிவுற அறிகிறோம். நிகண்டு எழுதிய அமரன் என்னும் பெயருள்ள மகாவித்துவான் சூத்திரன் என்பது நன்றாய்த் தெரிகிறது.

**शूद्रायाममरः ............ षडेव शबरात्मजाः ।**

சபாஸ்வாமி என்றவர் நான்கு வர்ணத்திலும் மனைவியைக் கொண்டார். அதில் சூத்திரஸ்திரீயிடம் உதித்தவன் அமரன்.

அதிகம் படித்தவர்களிடத்தில் முக்கியமாய் அமையவேண்டிய குணம் ஒழுக்கமே. அதாவது— தாம் கற்ற சாஸ்திரங்களில் கூறியுள்ளவற்றை வழுவாது மேற்கொள்ளல், அநேகமாய் அதிகம் கற்றவர்களிடம் ஒழுக்கமமைவது அரிது. இதையொரு ஆங்கில வித்வான் சொல்லியுள்ளார். “Greatness and madness are both allied”, ஒழுக்கமற்றவன் சுத்தமுடையவனுகான் என வேதத்திலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது,

**आचारहीनं न पुनन्ति वेदाः छन्दांस्येनं मृत्युकाले त्यजन्ति ।**

இக்கருத்தே தமிழ்க்கிரந்தங்களிலும் அமைந்திருக்கிறது. ‘கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக’, நம் நாட்டு இருஷிகள் முதலியவர்கள் தபோநிஷ்டர்களாக இருந்தார்களெனத் தெரிகிறது; தபஸ் என்றால் கல்வினன்றே பொருள், **स्वाध्याय इति तपश्शब्द:** நம் வித்வான்கள் இகலோக சுகத்தை முக்கியமாய் கொண்டவர்கள்

**(एतल्लोकप्रधानो यः परलोकोपसर्जनः)**

அல்ல, இச்சரீரமே கர்மவசத்தாலுண்டானது **प्रारब्धं पुष्यति वपुः** அதைத் துலக்க வேண்டுமென்பதே அவர்கள் கொள்கையாம். அவர்கள் பற்றற்றவர்களாக இருந்தே இகசுகத்தை அனுபவித்தார்கள். இதைக் காளிதாசன் செய்யுளாலறியலாம் **असक्तस्सुख-मन्वभूत** நம் நாட்டு முன்னோர்களின் நிலைமையும் கொள்கையும் இத்தன்மையதாகும்.

கற்பவர்கள் முக்கியமாய் நன்றாய் கற்கவேண்டும். இலக்கணத்தில் தேர்ச்சி மிகவும் அவசியம். அதில் தேர்ச்சியுடையவர்களே உண்மையான வித்வான்கள். அங்ஙனம் இல்லாதவர்கள் என்றும் பங்கமடைவார்கள்

**केचिद्भ्रमास्सुध्युपास्यस्थलीषु केचिद्भ्रमाः कारके तद्धिते च ।**

நமக்குப் பணம் சம்பாதிப்பதே முக்கியமான குறியாயிருப்பதால் படிப்பதை ஊன்றிப்படிப்பதில்லை. நன்கு கல்வியைக் கற்றால்

இஷ்டப்பட்டவைகள் எல்லாம் சித்திக்குமென ஆப்த வாக்கிய மான வேதமே முறையிடுகிறது.

यं यं क्रतुमधीते तेन तेनास्य इष्टं भजते । अपपुनर्मृत्युं जयति ।

நாம் இப்பொழுது வேதவாக்கியங்களில் நம்பிக்கையற்றவர்களா கவும், உலகவாழ்கையை முக்கியமாய்க் கொண்டவர்களாகவும் ( Materialists ) ஆய்விட்டோம். நம்முடைய தர்மங்கள் அனேகமாய் அழிந்து போய்விட்டன. ஆதலால், எஞ்சியிருக் கும் ஒன்று இரண்டு தர்மங்களிலும் நமக்கு ஆதரவு குறைந்து விட்டது. எவ்வாறு அழுக்கு வேஷ்டியை உடுத்தவன் அதைப் பற்றி கவனியானோ, எவ்வாறு அதிகம் பொருள் இழந்தவன் மீந்தப் பொருளிலும் கவனம் செலுத்துவதில்லையோ அதுபோன்றதா கும் .நமக்கு தருமத்திலுள்ள ஆதரவு குறைவு

यथा च मलिनैर्वस्त्रैर्यत्र यत्रोपविश्यते ।
तथा चलितचित्तस्तु वित्तशेषं न रक्षति ॥

விடியற்காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்காவிடில், அவ் வீடு சுடுகாடென்றும், பிதுருதேவதைகள் அவ்விடம் விட்டகலு கிறார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ‘श्मशान तुल्यं तद्वेश्य पितृभिर्वर्ज्यते परं’ இப்பொழுது விடிந்த பிறகு தூங்காதவர் யாரு மில்லை.வண்ணான் வெளுத்த கழுதை சுமந்த வஸ்திரத்தை நனைக் காமல் உடுப்பதே தற்கால தர்மமாக வழங்குகிறது. இதை விசு வகுணதர்சமென்கிற கிரந்தத்தில் கவி நன்கு காட்டியுள்ளார்.

शिखायज्ञोपवीताभ्यां श्रुतेर्भारो भविष्यति ।

என்றதற்கேற்ப பிராமணர்களுக்கு முக்கிய தர்மமாயுள்ளது சிகாதாரணம் யஜ்ஞோபவீததாரணம்ஆகியஇவ்விரண்டே, அவை கட்கும் காலத்திற்கேற்ற கோலம் நேர்ந்து விட்டன. வைதிக ஸந்ததிகளிற் கூட பலர் தலைமயிரைக்கத்தரித்துவிட்டனர். அவர் களின் சட்டையினுள் உபவீததாரணமிருக்கிறதா என்பதே சந் தேகத்திற்கிடமாயுள்ளது.

இவ்வாறுஜாதிதர்மத்தையும் மததர்மத்தையும் ஆசிரமதர்மத் தையும்கைவிட்டவர்களான அல்பஜ்ஞர்களிடம் பயந்து ஆப்தவாக் கியமாகிற வேதம் தர்மத்தை உபதேசிக்கக்கூடத் துணியவில்லை.

'बिभेत्यल्पश्रुताद्वेदः मामयं प्लावयिष्यति' இக்காலத்தில் யாவரும் தன் வயிற்றை எப்படியாவது நிரப்புவதையே முக்கியமாகக் கொண்டுவிட்டனர்.

शिवानन्दलहरी: नित्यं स्वोदरपोषणाय निरतः । क्षान्तं न क्षमया ।

என்று பர்த்ருஹரி சொல்லுமாறு சமதமாதி குணங்கள் உண்மையில் வாய்ந்தவர்கள் ஒருவருமில்லை. பரலோகமொன்று உண்டென்ற எண்ணமே அழிந்துவிட்டது. பணத்தின் பொருட்டும் பிறரை அணுகி ஸ்தோத்திரம் செய்வதே மக்கள் தொழிலாய் விட்டது. இத்துதியை ஈசுவரவிஷயத்தில் செலுத்தினால் இப்பிறவிக் கடலில் நின்றும் கரையேறுதார் யார் 'कोनमुच्येतबंधनात्' தற்காலம் வேத சாஸ்திரங்கள் சொல்லுவது சரியல்ல. அவரவர்களுக்கு தோன்றுவதே தர்மமாய் விட்டது. இவ்விஷயத்தை ஒரு கவி கூறுகிறார். 'यत्रस्वप्रतिभामानं तस्मै श्रीकलये नमः' நாம் நமது கல்வியைக் கசடறக் கற்று அதன்படி ஒழுக முயன்றால் இக்குறைகள் ஏற்படாது.

அனேகர்கள் கல்விகற்பதன் பயனை ஸம்ஸ்கிருதம் முந்தியதா? தமிழ்முந்தியதா? இவ்விரண்டில்எதுசிறந்தது? எனப்பயனற்றவிசாரத்திலும் சண்டையிலும் காலத்தைக் கழிக்கிறார்கள். அதுகாக்கைக்கு எவ்வளவு பற்கள் உள்ளன 'काकस्य कतिवादन्ताः' என்ற விசாரத்திற் கொப்பாகும். ஸம்ஸ்கிருதமே எப்பாஷைக்கும் ஆதியாயும்ஆதாரமாயும் உள்ளதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. இச்சம்ஸ்கிருத எழுத்திற்கு தேவநாகரீ என்ற பெயரே இதன் முதன்மையை நன்கு அறிவிக்கிறது. தமிழ்ப்பாஷையைச் சந்திரேசுவரர் நக்கீரர் என்பவருக்கு உபதேசித்தருளியதாக ஹாலாஸ்ய மஹாத்மியத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதனால் தமிழின் சிறப்பும் வெளியிட்டதாகும். ஸம்ஸ்கிருதச் சொற்களே தங்கள் கிரந்தங்களில் நிறைந்திருக்கிறதென்று தெலுங்கர்களிலும், மலையாளிகளும், கன்னடியர்களிலும் உணராதார் யாருமில்லை. தமிழில் ஆதிகாவ்யங்களில் ஸம்ஸ்கிருதம் கலப்பில்லையெனச்சிலர் கூறுகின்றனர். அது தவறு தமிழில் இதுவரையில் காணப்படும்எந்தக்கிரந்தத்திலும் ஸம்ஸ்கிருதபதங்கள்கலப்பில்லாமல் இருக்கவில்லை. ஒரு தமிழன் ஸம்ஸ்கிருதச் சொற்களைக் கலப்பதில்லை என்று சத்யம் செய்துகொண்டு ஒரு கிரந்தம் எழு

தத்தலைப்படினும் அதிலும் சில ஸம்ஸ்கிருதச்சொற்கள் கலப்பில்லாமலிராது. பிராமணர்களுக்கோ பிராமணர் அல்லாதவர்களுக்கோ ஸம்ஸ்கிருதமேபுராதனபாஷை பிராமணரல்லாதவர்களும் சிராத்த சங்கல்பம் முதலியவைகளை இப்பொழுதும் ஸம்ஸ்கிருதச் சொற்களாலேயே செய்து வருகிறார்கள் நாடகங்களிலும் பறையர்கள் சாண்டாளீ என்ற பிராகிருத பாஷையையே பேசியதாகத் தெரிகிறது. ஆதலால் நாம் தேசபாஷையைப் பயிலுவதுடன் நம் பிராசீன பாஷையாயுள்ள ஸம்ஸ்கிருதத்தையும் பயிலுவது மிகவும் அவசியமாகும். ஆங்கில வித்துவான் ஒருவர் சொல்வதாவது நாம் நம் தேசபாஷையாயுள்ள ஆங்கிலம்முதலியவைகளைக் கற்பதுடன் முன்னோர்கள் பாஷையாயுள்ள, லாடின், கிரிக்கு, பாஷைகளையும் பயிலவேண்டுமென்பதாம், 'The Experience shows that we should learn the mother tongue as well as the ancestral language behind' யோக ஸூத்திரம் முதலிய ஸம்ஸ்கிருத புத்தகங்களை ஒழுங்காக தமிழ்படுத்துவது இயலாது. ஆதலால் இரு பாஷைகளும் (தமிழும் ஸம்ஸ்கிருதமும்) ஒன்றோடொன்று ஒற்றுமையாயுள்ளது. ஆதலால் அவைகளில் ஏற்றத் தாழ்வு பாராட்டுவது தகாது.

நீங்கள் (பண்டிதர்கள்) இங்கு வந்திருப்பது கல்வி கற்பதற்கல்ல. கல்வியிற் சிறந்த உங்களுக்குக் கற்பிக்க வேண்டுவதுஒரு சிறிதுமில்லை. ஆனால் உங்களால் அனேகர்கள் முன்னேற்றமடைய வேண்டியிருப்பதால் அக்கல்வியை எவ்வாறு போதிப்பதெனபோதனை முறையைக் கற்றுக் கொள்வதற்கே நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். சிலர் நன்கு கற்றிருந்தாலும் பிறர்க்கு போதிக்கும் முறையறியார். சிலர் சிற்றறிவு வாய்ந்தவராயிருப்பினும் பிறர்க்கு நன்கு போதிப்பார்

श्लिष्टा क्रिया कस्यचिदात्मसंस्था संक्रान्तिरन्यस्य विशेषयुक्ता ।

வித்தையைப் போதிப்பதும்ஒரு தொழிலாகப் பரிகணனம் செய்யப் பட்டிருக்கிறது.

विद्या शिल्पं ………… दश जीवनहेतवः ।

நாம் கல்வியைப் பணத்திற்குவிற்பதையே தொழிலாகக் கொள்ளக்கூடாது.

**यस्यागमः केवलजीविकायै तं ज्ञानपण्यं वणिजं वदन्ति ।**

ஆதலால் கல்வியிற் தேர்ச்சியும் போதிக்கும் திறமையும் வாய்ந்தவனே சிறப்புற்று விளங்குவான்.

**यस्योभयं साधु सशिक्षकाणां धुरि प्रतिष्ठापयितव्य एव ।**

நம் தமிழ்நாட்டிலேயே இவ்வாசிரியப் பயிற்சிக்கலாசாலை ஏற்பட்டது மிக்க மெச்சத்தக்கது. வேறு தேசத்தில் ஏற்படின் நம் தேசசாரத்தை விட்டுவிட நேரிடும், பிறதேசம் செல்ல நேர்ந்தால் அனேகர் தங்கள் வழக்கத்தைவிட்டு, எங்கள் தேசத்தில் இது தான் வழக்கமென்று புதிய வழக்கங்களை கைப்பாளுகிறார்கள். கட்டுப்பாடு போகிவிடுகிறது. 'They will become as an unbridled horse of runcontolled animal', நம் நாட்டிலேயே நம்மவர்களிடையே மேன்மை வாய்ந்திருத்தல் வேண்டும் இதுவே வேதத்தில் கூறப்பட்டுள்ளது, **'समानानामुत्तमश्लोकोऽस्तु'** விஷயங்களைக் கசடறக்கற்று போதித்தல் வேண்டும், ஒரு பதத்தை நன்கு உச்சரிப்பின் எத்துணையோ பலன் கூறப்பட்டுள்ளது.

**एकश्शब्दस्सम्यज्ज्ञातस्स्वर्गे लोके कामधुग्भवति ।**

நாம் எப்பொழுதும் ஸன்மார்க்கத்தையும் ஸத்சாஸ்திரத்தையுமே போதிக்கவேண்டும், **प्रागेव भुञ्जीत केशान् लुंछेत्** என்றவாறு விடியற்காலையில் உண்ணவேண்டும், தலைமயிரை எடுத்துவிடவேண்டும், விஷய சுகங்களையே அனுபவிக்க வேண்டும் என்று கெட்ட மார்க்கத்தையும் அஸத்சாஸ்திரத்தையும் போதிக்கக்கூடாது இதற்கு மேல் நாட்டிலொரு திருஷ்டாந்தக் கதை கூறுகிறார்கள்.

ருஷ்யா தேசத்தில் கிருல்லாப் என்பவர் ஒரு கதை எழுதியுள்ளார். அதாவது:—ஓர் ஊரில் ஒருவன் திருட்டுத் தொழிலாலும், மற்றொருவன் அசத்சாஸ்திரங்களை பிரசாரம் செய்வதாலும் உயிர் வாழ்ந்துவந்தனர், இருவரும் இறந்ததும் நீதியுரைக்கும் நாளன்று கடவுள் இருவரையும் இரண்டு எண்ணைக் கொப்பரையில் போட்டு கொஞ்சம் விறகு கொடுத்து எரிக்குமாறு இருதேவஸ்திரீகளுக்கு கட்டளையிட்டுச் சென்றார், திருடன்கீழ் சீக்கிரம் எரிக்கப்பட்டு அவன் பிறகு வேற்றுருவம் அடைந்தான், மற்றொருவன்கீழ் மெள்ள வெகுநாள் எரிப்பதைப்பார்த்து, 'என்னை வுன்

இவ்வாறு வதைக்கிருய்? என்று வினவ, 'அத்திருடனே உயிருள்ளளவும் உலகில் உபத்திரவித்தான், நீ இயற்றிய அஸத்சாஸ்திரமோ இன்னும் பலரையும் கஷ்டத்திற்குள்ளாக்குகிறது' என அத்தேவஸ்திரீ பதில் அளித்தாள்.

ஆதலால் நாம் நல்லவற்றையே போதிக்கவேண்டும், ஆசிரியத்தொழில் மிக்க மேன்மைவாய்ந்தது, இதை நம் முன்னேர்கள் முக்கியமாய் கையாண்டுவந்தனர், अधीतिबोधाचरणप्रचारणैः என்று இதை நைடதத்தில் கூறியிருக்கின்றது. तदानं चैव शिष्येभ्यः என்று ஸ்மிருதியில் இவ்வாசிரியத்தொழிலைச் சிறப்பாய் கூறியிருக்கிறது. ஆதலால் நீங்கள் இவ்வாரியத்தொழிலை ஒழுங்கா நடத்திக் கீர்த்தியடையுமாறு வேண்டுகிறேன். இத்துடன் என் வார்த்தையை நிருத்திக் கொள்கிறேன். மங்களம்.

N. வைத்திநாதசாஸ்திரியள்.

---

## ஓர் சங்கை.

---

உலகில் ஸ்திரீகளுக்கு விவாக விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் நிபந்தனைகள் போல் புருஷர்களுக்கும் உண்டா? இல்லையா? ஒருவன் தன்னால் விவாகம் செய்துகொள்ளப்பட்ட ஸ்திரீகள் மரிக்க மரிக்க மேல் மேல் தன் ஆயுள் பூராவும் விவாகம் செய்து கொள்ளலாமா? அப்படி செய்துகொண்டால் அந்த ஸ்திரீகளால் ஐஹிக ஆமுஷ்மிக பலன்கள் ஏதாவது உண்டா? விவாகம் என்கிற பதத்தின் பொருள் என்ன விவாகத்தில் செய்யப்படும் காரியங்களில் எது முக்கியம் என்கிற இந்த சந்தேகங்களை நம் ஆர்ய தர்மத்தின் மூலமாக நிர்த்தி செய்யவேண்டுமென்று பண்டித மணிகளை வேண்டுகிறேன்.

கணபதி சாஸ்திரிகள்.

திருப்பளாத்துறை, எலம்பனூர்.

---